12th September 1958]

THE HON. SRI R. VENKATARAMAN : அது லிக்னைட்டைப்பற்றி இல்லை. ஹை டென்ஷன், லோ டென்ஷன் இன்ஸுலேட்டர் செய்யும் தொழிற்சாலை மார்ச்சு 31-ல் ஆரம்பிக்கும்.

SRI D. S. AUTHIMOOLAM : இரண்டாவது திட்டகாலத்தில், நெய்வேலிக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ? அது எந்த அளவில் செலவாகிறது ? முன்னேற்றகரமாக செலவாகிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 66·90 கோடி. ஆனால் இப்பொழுது ஒதுக்கப்பட்டதைவிட அதிகமாகப் போய்விடும். ரூ. 75 கோடி வரை வேண்டியிருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. நல்ல முறையிலே படிப்படியாக முன்னேற்றம் ஏற்பட்டு நடந்து வருகிறது.

MR. SPEAKER : கனம் நிதி அமைச்சர் வந்து விட்டார். ஸ்ரீ தியாகராஜன் இப்பொழுது அவருடைய கேள்வியைக் கேட்கலாம்.

Kallupatti Block Advisory Committee

*176 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) சென்ற ஒரு ஆண்டு காலமாக மதுரை ஜில்லா கலெக்டர் கல்லுப்பட்டி ப்ளாக் அட்வைசரி கமிட்டி கூட்டம் தேவையில்லையெனக் கூறி நிறுத்தி வைத்தது சர்க்காருக்குத் தெரியுமா ?

(ஆ) அப்படியானல் இதற்கு காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The Collector of Madurai issued no such directions.

SRI N. R. THIAGARAJAN : கலெக்டரிடம் பேசியதில், அடிக்கடி கூட்டம் கூட்டுவதால், அதிகக் குறைகள் கூறுகிறார்கள். ஆகையால் கூட்டம் கூட்டத் தேவையில்லை என்று வலியுறுத்திக் கூறுகிறார். சர்க்கார் கலெக்டர் அடியோடு கூட்டம் நடத்தத் தேவையில்லை என்று உத்தரவு போட்டிருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த மாதிரித் தகவல் இல்லை. இந்தக் கமிட்டிகள் எந்த அளவுக்குக் கூட வேண்டுமோ அந்த அளவுக்குக் கூட்ட ஏற்பாடு செய்யப்படும். ஏதோ ஹாஸ்யமான முறையில் அவர்கள் சொன்னதை வீரியஸாக அங்கத்தினர்கள் எடுத்துக்கொண்டு புகார் செய்கிறார்களோ என்று பயப்படுகிறேன். முன்பு சில அங்கத்தினர்களை நியமிப்பதில், அரசாங்கத்திலிருந்து உத்தரவு போடத் தாமதம் இருந்தது. இப்பொழுது புதிதாக உத்தரவு போட்டிருக்கிறோம். அதாவது சில அங்கத்தினர்கள் நியமிக்கப்படாவிட்டாலும் இந்தக் கமிட்டிக் கூட்டங்கள் நடக்க வேண்டும் என்று.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : அட்வைசரிக் கமிட்டிக் கூட்டம் கூட்டப்படாத காரணத்தால் திட்ட வேலைகள் குறிப்பிட்ட காலத்தில் முடியாமற் போகுமாதலால் காலத்தை அதிகரிக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அப்படிச் செய்ய வேண்டிய அவசியமில்லை. திட்ட காலத்திற்குள், எல்லாக் காரியங்களையும் செய்ய எல்லா விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

MR. SPEAKER : அடுத்து வரும் 185, 186 இரண்டு கேள்விகளையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

Ministers' tour

*185 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Hon. the Chief Minister and Hon. the Minister for Public Works undertook any tour of Devikulam and Peermedu taluks of Kerala State in May 1958 at State cost; and

(*b*) if so, the official business transacted during this tour?

[12th September 1958

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No.

(*b*) Does not arise.

* 186 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the names of the Ministers who had been to the Devikulam-Peermedu Constituency of the Kerala State for election propaganda in connection with the election held on 16th May 1958; and

(*b*) the expenditure incurred therefor?

THE HON SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) Only the Chief Minister and the Minister for Works visited Devikulam and Peermedu in May 1958. The Chief Minister toured at his own expense and the tour of the Minister for Works was private.

SRI N. K. PALANISAMI : கேரள மாநில மந்திரிகள் அந்தத் தேர்தலிலே சேர்ந்து கொள்ளாமல் இருந்தபோது, இங்கேயிருந்து மந்திரிகள் அங்கு சென்று பிரசாரம் செய்வது நியாயமா ?

MR. SPEAKER : The Hon. Minister said that it was a private visit. Then how does the question arise?

SRI A. V. P. ASAITHAMBI : மந்திரிகள் நாடு பூராவும் சுற்றும் போது, வெறுமனே சுற்றுமல், ஆங்காங்கே உள்ள கலெக்டர் ஆபீஸ், தாசில்தார் ஆபீஸ்களில் எந்த எந்த பைல்கள், எவ்வளவு காலமாகப் பெண்டிங்காக இருக்கிறது, எவ்வளவு தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பதுபோன்ற தகவல்களை எல்லாம் சேர்த்துப் பார்த்து பிராயணங்களை பயன் உள்ளதாகப் பண்ணுகிறார்களா? அப்படியில்லையென்றால் இனிமேலாவது மந்திரிகள் அப்படிச் செய்வார்களா ?

MR. SPEAKER : மெம்பர் அவர்கள் பொதுவாக அட்வைஸ் கொடுக்கிறார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : தேவிகுளம், பீர்மேட்டில் பைல் பார்க்க நாங்கள் அனுமதிக்கப்படமாட்டோம்.

SRI V. K. KOTHANDARAMAN : தேர்தலுக்காக இல்லாமல், சொந்த பிஸினஸ் ஆக இருந்தாலும்கூட, போனபோது, சொந்த கார் உபயோகப்பட்டதா, அல்லது சர்க்கார் கார் உபயோகப்படுத்தப்பட்டதா?

THE HON. SRI C. SUBRAMANIAM : சர்க்கார் கார் உபயோகப்படுத்தப் படவில்லை.

SRI K. SATTANATHA KARAYALAR : கேரள சமஸ்தானத்திற்கு, நம் சமஸ்தானத்திலிருந்து, போலீஸ் ஜீப் (நம் சர்க்கார் ஜீப்), தேர்தல் சமயத்தில் போய் இருந்ததா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தத் தகவல் என்னிடம் இல்லை. போகாது என்று நினைக்கிறேன்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : அப்படி மற்ற மந்திரிகள் வேறு பிரதேசத்திற்குப் போகக் கூடாது என்ற விதி ஏதாவது இருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நாங்களும் மந்திரிகளானாலும், இந்தியப் பிரஜைகள்தான், எங்கு வேண்டுமானாலும் போகும் சுதந்திரம் எங்களுக்கும் உண்டு.